04.02.2026

O.S.No.467/2024

PW1- பேச்சிமுத்து – த/பெ. ராமகிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. என் அப்பா ராமகிருஷ்ண நாடார் எப்போது இறந்தார் என்றால் 40 வருடங்களுக்கு முன்பு இறந்தார் குறிப்பான வருடம் தெரியாது.

2. என் தாத்தா ராமலிங்க நாடார் எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை.

3. என் தாத்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தனர் என்றால் 4 ஆண், 3 பெண் பிள்ளைகள் உள்ளனர்.

4. நான்கு ஆண் மகன் பெயர் என்ன என்றால் தங்கசாமி, முத்துசாமி, ராமகிருஷ்ணன் மற்றும் ராமசாமி. பெண்வாரிசுகள் பெயர் என்ன என்றால் முத்துலட்சுமி, மீதி 2 பேர் பெயர் நியாபகம் இல்லை.

5. 3 பெண் பிள்ளைகளில் ஒரு பெண் பிள்ளை என் ஊருக்கு பக்கத்தில் உள்ள ராமநாதபுரம் என்ற ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் இல்லை.

6. என் ஊர் பாவூர்சத்திரம் பகுதியில் தென் மேல்பக்கம் உள்ளது சரிதான்.

7. ராமநாதபுரத்தில் திருமணம் செய்து கொடுத்த அத்தையின் மகன் பெயர் செல்லப்பா என்றால் சரிதான்.

8. பிரதிவாதி என் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். எவ்வளவு நாட்களாக பிரதிவாதியை எனக்குத் தெரியும் என்றால் 30 வருடமாக தெரியும். பிரதிவாதி குடும்ப உறுப்பினர்கள் பற்றி அனைத்து விவரங்களும் தெரியும் என்றால் சரிதான்.

9. என் ஊரில் ராமலிங்க நாடார் மகன் ராமசாமி என்ற நபரின் பேரில் எத்தனை பேர் உள்ளனர் அதில் எத்தனை பேர் எனக்குத் தெரியும் என்றால் என் சித்தப்பாவைத் தவிர வேறு யாரையும் தெரியாது.

10. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடம் எனக்கு வேண்டும் எனக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

11. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிராது சொத்தின் வில்லங்க சான்றிதழை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

12. பிராது 5வது பத்தியில் ராமசாமி நாடார் மகன் செல்லப்பா என்பவருக்கு மற்றொரு ராமலிங்க நாடார் மகன் ராமசாமி என்பவர் 1990ல் மோசடி ஆவணம் ஏற்படுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

13. ராமநாதபுரத்தில் திருமணம் செய்து கொடுத்த என் அத்தை கணவரின் பெயர் ராமசாமி என்றால் சரிதான்.

14. அந்த ராமசாமிக்கு தான் என் சித்தப்பா 1990 ல் ஒரு ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

15. ராமசாமி மற்றும் செல்லப்பாவை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

16. பிரதிவாதியின் அம்மா தனலெட்சுமி என்பவருக்கு ஓர் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் அவரையும் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

17. வழக்கு சொத்திற்கு நான் அனுபவம் செய்தேன் என்பதற்கு ஆதரவாக தீர்வை செலுத்தி அந்த ரசீதினை இந்த வழக்கில் ஆதரவாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி ரசீது கட்டியுள்ளேன் ஆனால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

18. என் நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் எண்.6 ல் பத்தி எண்.10 ல் பதிவுத் துறையில் எந்தவொரு சொத்தையும் எவரும் எவருக்கு வேண்டுமானாலும் என்ற விதிமுறை பின்பற்றுவதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த கூற்றுப்படி தான் என் அப்பா ஓர் அடமான ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

19. என் பெரியப்பா, சித்தப்பாவிற்குள் எப்போது பாகம் பிரிக்கப்பட்டது என்றால் 40 வருடத்திற்கு முன்பு பிரிக்கப்பட்டது.

20. என் பிராதில் பக்கம் எண்.4 ல் பத்தி எண்.6 ல் பிரதிவாதி கடந்த 23.09.2024 முதல் பிராது சொத்திற்கு 3ம் நபர்களை அழைத்து அடையாளம் காண்பித்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு உரிமை இல்லாத சொத்து என்பதால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

21. வழக்கு சொத்திற்கு பட்டா கொடுத்ததை ரத்து செய்ய கோட்டாட்சியர், வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன்.

22. என் அப்பா இறந்த பின் தான் 1990ம் வருடம் என் தாத்தா சொத்து எங்கள் குடும்பத்தில் பாகம் பிரிக்கப்பட்டு பிராது சொத்து ராமலிங்கம் மகன் ராமசாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்ட என் சித்தப்பா பாகத்திற்கு ஒதுக்கிய சொத்தை தான் அவர் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல.

23. என் பிராது சங்கதிகளும், முதல் விசாரணை சங்கதிகளும் முன் பின் முரணாக இருப்பதால் என் பிராதை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

24. என் சித்தப்பா செல்லப்பாவிற்கு சொத்தை விற்ற விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான்.

25. என்னுடைய வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

26. பிரதிவாதி 1990 முதல் நாளது வரை தபசில் சொத்தில் உரிமை மூலம் ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றும் அதற்கான ஆவணங்களும் பிரதிவாதி வசம் உள்ளதால் பிரதிவாதியின் எதிர்கோரிக்கை மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

27. என் சித்தப்பா மற்றும் அத்தை மகன் சொத்து விற்பனை செய்த விவரம் தெரிந்தும் நான் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் என் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

28. ஒரு சொத்திற்கு முக்கியமானதே சர்வே எண் மட்டுமே எல்கை மால் அல்ல என்பதால் என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

29. வழக்கு சொத்திற்காக என் பெயரில் உள்ள பதிவு மற்றும் வருவாய் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் என் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

30. என் தரப்பில் உள்ள ஆவணங்கள் நில உடைமை சீர்திருத்தத்தின் பபோது ஏற்பட்ட தவறான பதிவினை வைத்து நான் தபசில் சொத்தில் எந்த உரிமையும் கோரமுடியாது எனவும், பிரதிவாதிக்கு சரியான

பதிவு மற்றும் வருவாய் ஆவணங்கள் உள்ளதால் பிரதிவாதியின் எதிர்கோரிக்கையை அனுமதித்து என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

31. நான் பிரதிவாதியின் மீது கூறியுள்ள தவறான சங்கதிகளைப் பொறுத்து நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி